தேதி : 10.11.11

### பாரம்பரிய மாடு... பட்டணம் ஆடு...





காங்கேயம் காளையுடன் என்.எஸ். பழனிச்சாமி...

'முன்பெல்லாம் வருடத்துக்கு 450 மூட்டை உரம் போட்டுக்கொண்டிருந்தாதகவும், ஆனாலும், பெரிய லாபமில்லை இப்பொழுது மண்ணையும் மலடாக்காமல் தன்னையும் நஷ்டப்படாமல் காப்பாத்திக்கிட்டுருக்கறது, ஜீரோ பட்ஜெட் விவசாயம்தான் என்கிறார் முன்னோடி விவசாயிகளில் ஒருவரும், விவசாயப் போராளியுமான முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்.எஸ். பழனிச்சாமி.

திருப்பூர் மாவட்டம், நாதகவுண்டன்பாளையம் கிராமத்தில் இருக்கிறது 3,000 தென்னை மரங்களைக் கொண்டிருக்கும் இவருடைய 50 ஏக்கர் தோப்பு. அதற்குள் 20 காங்கேயம் இன நாட்டு மாடுகள் மற்றும் 27 செம்மறி ஆடுகள் நடமாடும் உரத்தொழிற்சாலைகளாக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

ஆடு, மாடுகளோடு அளவளாவியபடி தோட்டத்தில் நடைபோட்டுக் கொண்டிருந்த பழனிச்சாமியைச் சந்தித்தோம். மயிலைக்காளையைத் தடவிக் கொடுத்துக் கொண்டே பேச ஆரம்பித்தார்.

இவர் குடும்பம் பரம்பரை பரம்பரையாக விவசாயம் பார்க்கிறார்கள். படிப்பை முடித்துவிட்டு சிறிது நாள் ஆங்கில விரிவுரையாளராக வேலை பார்த்துள்ளார். அந்த சமயத்தில் விவசாயப் போராட்டங்கள் இவரை ஈர்த்தாக கூறுகிறார். 1970-களில் வேலையை விட்டுட்டு விவசாயிகளின் உரிமைகளுக்காக குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளார். அதேசமயம் விவசாயத்தையும் நல்ல முறையில் செய்துகொண்டிருக்கிறார்.

விவசாயம் நன்றாக இருந்தால்தான் விவசாயி நன்றாக இருக்க முடியும். ரசாயன விவசாயத்துல இருந்து விவசாயிகள மீட்க வேண்டும் என்று முடிவு செய்திருப்பதாக கூறுகிறார்.

அந்த நேரத்தில்தான் வந்தது 'பசுமை விகடன்'. அதில் வெளிவந்த இயற்கை விவசாயக் கட்டுரைகளை வைத்து, இவரே முன்னோடியாக இருந்து வழிகாட்ட முடிவுபண்ணியதாக கூறுகிறார். ஈரோட்டில் பசுமை விகடன் நடத்திய சுபாஷ் பாலேக்கரோட 'ஜீரோ பட்ஜெட்' பயிற்சி இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாரோட இயற்கை விவசாயப்

பயிற்சி என்று நிறைய பயிற்சிகளில் கலந்துக்கொண்டு அதையெல்லாம் நடைமுறைப்படுத்த ஆரம்பித்திருப்பதாக கூறுகிறார்.

'ஒரு மாடு இருந்தாலே முப்பது ஏக்கருக்கு ஜீரோ பட்ஜெட் விவசாயம் பார்த்துவிடலாம். ஆனால், இவர் காங்கேயம் மாடுகளை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காக மயிலை, செவலை, காரி என்று 20 காங்கேயம் மாடுகளை வளர்த்துக்கொண்டிருக்கிறார். கன்று, கிடேரி, பசுனு வயசு வாரியாக மாடுகள் இருக்கிறது. ஆரம்பத்தில் வாங்கிட்டு வந்த ஒரு ஜோடியில் இருந்துதான் இத்தனையையும் பெருக்கியுள்ளார். இதை வைத்து 200 மாடுகளாக பெருக்கிட இருப்பதாக கூறுகிறார். இதற்காக 30 ஏக்கரில் மேய்ச்சல் நிலத்தைப் பராமரிக்கிறார். அதில் மானாவாரியாப வளர்கிற கொழுக்கட்டைப் புல் காங்கேயம் மாடுகளுக்கு அருமையான தீவனம்.

சாணம், மூத்திரம் ரெண்டும் சேதாரம் இல்லாம கிடைப்பதற்காக சிமென்ட் தரை போட்டு தொழுவம் கட்டியிருக்கிறார். ஜீவாமிர்தம் தயாரித்தது போக மீதி சாணம், மூத்திரத்தை எருக்குழிக்குள் (20 அடி நீளம், 10 அடி அகலம், 10 அடி ஆழம் உள்ள குழி) விட்டு, தென்னைமட்டை, இலை-தழை, தீவனக்கழிவு எல்லாவற்றையும் அதிலேயே போடுகிறார். ஜீவாமிர்தத்தை வடிகட்டிய பிறகு கிடைக்கிற சக்கையையும் தண்ணீரில் கரைத்து எருக்குழி மேல் தெளித்து விடுகிறார். மூன்று மாதத்தில் இது நன்றாக மக்கிவிடும். மூன்று மாதத்திற்கு ஒருமுறை இதை எடுத்து ஒவ்வொரு தென்னைக்கும் ஐந்து கிலோ கொடுக்கிறார். அதனால் மரமெல்லாம் அருமையாக காய்ப்பதாக கூறுகிறார்.

ஈரியோபைட் தொல்லை!

தென்னையைத் தாக்கி, விவசாயிகள் நிலைகுலைய வைக்கிற 'ஈரியோபைட்' நோய்கூட கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டு வருகிறது. ஈரியோபைட்டை ஒழிக்கிறதுக்கு விவசாய அதிகாரிகள் வேப்பம்பிண்ணாக்கை வைக்கச் சொல்கிறார்கள். ஆனால், ஜீரோ பட்ஜெட் விவசாயத்தில் இது தானாகவே கட்டுப்படுகிறது. மாதத்துக்கொரு முறை மரத்துக்கு கால் கிலோ கன ஜீவாமிர்தமும் கொடுக்கிறார். அதனால் தரமான கொப்பரை கிடைக்கிறது. இவர் தோப்பு கொப்பரை, கிலோவுக்கு அம்பது காசு கூடுதலாக விலை போகிறது.

மொத்தமுள்ள 3,000 தென்னையில், 2,500 காய்ப்பில் இருக்கிறது. 500 மரம் காய்ப்புக்கு வர இன்னும் ஒரு வருடம் ஆகும். மரத்துக்கு சராசரியாக 130 காய்கள் என்று வைத்துக் கொண்டாலும் வருடத்துக்கு 3 லட்சத்து 25 ஆயிரம் காய் கிடைக்கும். சராசரியாக காய்க்கு 7 ரூபாய் என்று விலை கிடைத்தாலும் வருடத்திற்கு 22 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கும். இதுபோக மாதம் 2,500 தென்னைமட்டையை விற்று, இதன் மூலமாக வருடத்துக்கு 30 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது.

தென்னைக்குள் ஊடுபயிராக 10 ஏக்கரில் கொய்யா, 10 ஏக்கர்ல கோக்கோ இருக்கிறது. இவற்றிற்கென்று தனியாக எந்தப் பராமரிப்பும் செய்வதில்லை. கொய்யாவை ஏக்கர் எட்டாயிரம் விலை வைத்து, 10 ஏக்கருக்கும் சேர்த்து வருடத்திற்கு 80 ஆயிரம் ரூபாய்க்கு குத்தகைக்கு விட்டுள்ளார். கோகோ நட்டு மூன்று வருடம்தான் ஆகிறது. இன்னும் மகசூலுக்கு வரவில்லை. வரவு வருகிற அளவுக்கு செலவும் வருகிறது. மொத்த இடத்துக்கும் சேர்த்து, 7 ஆட்களை வேலைக்கு வைத்திருக்கிறார். அவங்களுக்கு வருட சம்பளம் மொத்தமாக 4,80,000 வருகிறது. மாட்டுக்குத் தீவனம் 50,000 ஆகிறது. வருடம் இரண்டு முறை உரம் வைப்பதற்கு 10,000 ஆகிறது. பாசனம் பம்ப் செட் பராமரிப்புக்கு

வருடத்திற்கு 15,000 செலவாகிறது. நன்றாக விளைந்து, நல்ல விலையும் கிடைத்தால் 50 ஏக்கர் தென்னை விவசாயத்திலிருந்து வருடத்துக்கு 23 லட்ச ரூபாய் வருமானம் கிடைக்கும். இதில் செலவு ஆறு லட்ச ரூபாய் போக 17 லட்ச ரூபாய் லாபமாக கிடைக்கும்' என்கிறார் பழனிச்சாமி.

மண்புழு

'ஜீரோ பட்ஜெட் தொழில்நுட்பம் விவசாயிகளுக்குக் கிடைத்த வரப்பிரசாதம். அதை அனைத்து விவசாயிகளுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும். நூற்றுக்கணக்கில் நாட்டுமாடுகள் மற்றும் ஆடுகளை உள்ளடக்கிய ஜீரோ பட்ஜெட் மாதிரிப் பண்ணையாக இதை உருவாக்கி, தகுந்த வல்லுநர்களைக் கொண்டு பயிற்சியும் தரப் போவதாக கூறுகிறார். இவருக்குள்ள 85 ஏக்கர் நிலத்தை மண்புழுக்காக ஒதுக்கப்போவதாகவும் கூறுகிறார். இயற்கை வழி வேளாண்மை ஒன்று தான் ஏற்றமிகு விவசாயத்திற்கான மாற்றுவழி" என்கிறார் பழனிசாமி.

தென்னை நடவு

புதிதாக தென்னங்கன்று நடுபவர்களுக்காக சில சாகுபடி குறிப்புகளைச் சொல்கிறார், என்.எஸ். பழனிச்சாமி. பீஜாமிர்தக் கரைசலில் கன்றுகளை நான்கு மணிநேரம் வரை ஊற வைத்து விதைநேர்த்தி செய்த பிறகுதான் நடவு செய்ய வேண்டும். 2 அடி சதுரத்தில் 3 அடி ஆழத்துக்குக் குழி எடுத்து, அதற்குள் 5 கிலோ தொழுவுரம், 250 கிராம் கன ஜீவாமிர்தம் ஆகியவற்றை இட்டு, நடவு செய்ய வேண்டும். ஒவ்வொரு கன்றுக்கும் 27 அடி இடைவெளி கொடுக்க வேண்டும். இந்த இடைவெளியில் ஊடுபயிர்களையும் சாகுபடி செய்யலாம். இவற்றுக்காக தனிப்பராமரிப்பு தேவையிருக்காது. ஆரம்பத்தில் இருந்தே

பாசன நீருடன் ஏக்கருக்கு 200 லிட்டர் என்ற அளவில் ஜீவாமிர்தத்தைக் கலந்துவிட வேண்டும்.

கன்று நடவிலிருந்தே ஜீரோ பட்ஜெட் முறையில் தென்னை சாகுபடியை செய்தால், நோய்கள் தாக்காது. காய்ப்புக்கு வந்த பிறகு 40 நாட்களுக்கு ஒருமுறை, ஒவ்வொரு மரத்தில் இருந்தும் குறைந்தபட்சம் 25 தரமான தேங்காய்களை அறுவடை செய்ய முடியும்" என்றார்.

களை எடுத்து, உரம் வைக்கும் ஆடுகள்

'பட்டணம் ஆடு' என்கிற ரக செம்மறி ஆடுகளையும் என்.எஸ். பழனிச்சாமி வளர்த்து வருகிறார். அதைப்பற்றி பேசியவர், ஒரு முறை ராமநாதபுரம் மாவட்டத்துக்குப் போயிருந்தப்போது, 'பட்டணம் ஆடு' ரகத்தைச் சேந்த செம்மறி ஆடுகளைப் பார்த்துள்ளார். அந்த ரகம், கடுமையான வெயிலையும், வறட்சியையும் தாங்கி வளரக்கூடிய ரகம் என்று சொன்னதால் அதில் பத்துக் குட்டிகளை வாங்கி வைத்து வளர்க்க ஆரம்பித்துள்ளார். இப்பொழுது இரண்டு வருடத்தில் 27 ஆடுகளாப் பெருகியுள்ளது. இந்த ஆடுகள்தான் தென்னந்தோப்பிற்க்குள் களை எடுத்து உரம் வைக்கும் வேலையைப் பார்ப்பதாக கூறுகிறார். காலையில் பட்டியில் இருந்து திறந்து விட்டால் மாலை வரை மேய்ந்துகொண்டு இருக்கிறது. அதோடு தோட்டம் முழுக்க உரத்தையும் (கழிவுகள்) போடுகிறது என்றார்.

தொடர்புக்கு

என்.எஸ்.பழனிச்சாமி,

அலைபேசி (செல்போன்): 94423-73374